11665
C51-39

உ

முருகன் துணை.

# காட்டு வழி வந்த
# கதிர்காமத்தப்பன் திருவிளையாடல்

## ஆச்சரியப்படத்தக்க அற்புதவிஷயங்கள் பல அடங்கியது



வனமுறைவேட னருளியபூஜை
மகிழ்கதிர் காம முடையோனே.

இத் திருப்புகழின் சரிதையை 8-வது பக்கம் பார்க்க

திருத்தணிகேசன் துணை.

# மதிப்புரை

## "தணிகைமணி" ராவ் பகதூர்
## திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம்.ஏ.

கதிர்காமம் என்பது ஈழநாட்டில் (சிலோனில்) திருமுருகன் சிறப்புடன் வீற்றிருக்கும் தலம். அத்தலம் மாணிக்க கங்கை என்னும் நதிக்கரையில் உள்ளது. சூரசம்மார காலத்தில் முருகபிரான் உறைவதற்காகத் தேவ தச்சனல் நிருமிக்கப்பட்ட பாசறைத்தலமான இது ஏமகூடம் எனப்படும்.

எவ்வளவோ புண்ணியம் செய்தார்க்கே இத்தல தரிசனம் கிடைக்கும். இவ்வருமைத் தலத்தை ஒரு முறைக்கு இருமுறையாகச் சிரமம்பாராது சென்று தரிசித்துவந்த அம்மையார் மாது ஸ்ரீ பத்மாவதியம்மையாரிடம் கந்தபிரான் இக்காலத்திற் கண்கூடாகக் காட்டியருளிய திருவிளையாட்டு நிகழ்ச்சிகளை முருக பத்தியிற் சிறந்த மெய்யன்பரும், 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நன்னோக்கத்துடன் முருகர் சம்பந்தமான பல பாக்களையும் சரிதங்களையும் ஒருங்கு திரட்டி உலகுக்களித்த உத்தமருமாகிய ஸ்ரீ சுப்ரமண்ய நாயகரவர்கள்-இந்நூலில்இனிய செந்தமிழ் நடையில் விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

திருப்புகழிலிருந்தும் வேறு நூற்களிலிருந்தும் இத்தலத்து முருகபிரானது பெருமையைக் குறிக்கும் அரிய விஷயங்களையும் ஆங்காங்கு இந்நூலில் அவர்கள் விளக்கியுள்ளார்கள். உதாரணமாக, 'வெற்றிலை விடினும் வேலாம்' என்னும் சிந்தாமணி அடியிலும், 'வனமுறை வேட னருளிய பூஜை', 'ஆழி அளித்துற்றவர்மேல் மனோகர மளித்து' என்னும் திருப்புகழ்ப் பா அடிகளிலும் அமைந்துள்ள பொருளை விளக்கும் சரித்திரங்களைத் துருவி எடுத்து இவர் விளங்கக் காட்டுவது முருகரடியார்க்கு மிக இன்பத்தைத் தருவதாகும். இத்தகைய நன் முயற்சியிலேயே தமது பொழுதினைப் போக்கும் ஸ்ரீமான் நாயகரவர்கள் நோயற்ற வாழ்வுடன் பல்லாண்டு இத் தரணியில் வாழ "எம்மை யாளும் திருத்தணிகேச! அருள்புரிக!" என்று அவர் திருவடிக்கே விண்ணப்பம் செய்வோமாக.

சென்னை
19-10-1945.

வ. சு. செங்கல்வராய பிள்ளை.

உ.

முருகன் துணை.

# காட்டுவழிவந்த
# கதிர்காமத்தப்பன் திருவிளையாடல்.

ஆச்சர்யப்படத்தக்க அற்புத விஷயங்கள் பல
அடங்கியது.



சண்முகஞானபுரம் கந்தசாமி கோயில் வீதி.
திரு. செ. முத்துசாமிப் பிள்ளை அவர்கள்
உதவியால்

"வன்னிகுல மித்திரன்" பத்திராதிபர்
ஆ. சுப்பிரமணிய நாயகர் அவர்கள்
எழுதியது.

சென்-னை, ஸ்ரீ பாரதி பிரஸில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காபிரைட். 1945. இதன் விலை அணா 4.

# முகவுரை

முருகப்பெருமான் காணவும் கருதவும்படாத தனது இயற்கையைத் தன்னை ஓயாது நினைந்துருகும் அன்பர்களுக்குக் காணவும், கருதவுமாம்படி வைத்தற்பொருட்டு எழுந்த பேரருட்டிறத்தால் ஆங்காங்கு அம்மெய்யடியார்களுக்குத் தனது அருட்டிருவுருவு காட்டி அவரை ஆண்டருளின திருவிளையாடல்களைப் பல நூற்கள் பலப்பட விரித்துக் கூறுகின்றன.

சமீபகாலத்தில் அன்பர்கள் பொருட்டு அறுமுகன் நிகழ்த்திய பல அற்புதங்களை ஓர் சிறு நூலாக வெளியிட்டிருந்தேன். அவை தற்போது கைவசம் இல்லை. மீண்டும் அச்சிடவும் காகிதக் கட்டுப்பாட்டால் முடியவில்லை. இந்நிலையில் ஸ்ரீமதி வி. ஜி. பத்மாவதி யம்மையாருக்காக நமது கலியுக வரதன் நிகழ்த்திய திருவிளையாடல்களோ அன்பர்கள் பலரும் படித்து மிக மிக அதிசயிக்கத்தக்கதும் ஆனந்தங்கொள்ளத் தக்கதுமாகும்.

இதுகாறும் யான் எழுதி வெளிப்படுத்திய "அறுமுகன் அருள் விளையாட"லில் கனவில் தோன்றியுரைத்தும், அருவமாய் நின்று அருள்புரிந்ததுமாகும். கதிர்காமத்தப்பன் காட்டுவழிக்கேற்ப கருத்த பெருத்த திருமேனியுடன் உருத்தாங்கி வந்து நிகழ்த்திய திருவிளையாடலோ நாம் உச்சிமேற் கைகூப்பி ஓயாமல் போற்றத்தக்க அரும்பெருஞ் சிறப்பினை வாய்ந்ததாகும்.

அத்துடன் வயலூர் முருகன் வண்டி அனுப்பிய அற்புதமும், சண்முகஞானபுரம் கந்தப்பெருமான் பால்காவடி

எடுக்க உத்தரவளித்தும், அவன் அம்மையாருக்குக் காட்டிய ஜோதி தரிசனமும், கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தப் பெருமான் என்பதை வலியுறுத்துகின்றன. இவை யாவும் ஓர் புத்தக மூலமாய் வெளி வருதல் சிறப்பாக முருகனடியார்களும் பொதுவாக ஆஸ்திக நண்பர்கள் பலரும் பேருவகை கொள்வர் என்பதைக் கருதிக் கடிதவிலை அதிகரித்துள்ள இக்காலத்தில் இதனை வெளியிடச்செய்தேன்.

இவ்விஷயத்தில் ஒரு சிறிதும் புனைந்துரையின்றி எனக்குப் புகன்ற ஸ்ரீமதி வி. ஜீ. பத்மாவதி யம்மையார் அவர்களுக்கு எனது நன்றி யறிதலான வந்தனம் என்றும் உரித்தாகுக.

“ என்றன தெண்ணம் வின்மல ரடியா
ஏழையே னெழுதுறு மவைகள்

பன்னுறு முனது திருப்புக ழாகப்
பதிதர வமையுமா வருளாய்.

பொன்னுரு மயிலில் புவியெலாம் நொடியில்
புகழ்தர வருபுல வோனே

மன்னுரு வடபால் பழனிஆண் டவனே
வருகவென் றருள்புரியாயே.

என்ற வேண்டுகோட்படி என்னை மீண்டும் மீண்டும் அறுமுகன் அரும் பெரும் புகழினையே எழுதி வெளிப்படுத்த அவனிருதாளை அநுதினமும் போற்றுகின்றேன். பிழையுளதேல் பெரியோர் பொறுக்க.

12-10-45 ஆ. சுப்பிரமணிய நாயகர்.

உ

முருகன் துணை.

# காட்டுவழிவந்த கதிர்காமத்தப்பன் திருவிளையாடல்.

### விநாயகர் வணக்கம்.

சித்தி புத்தி திருவரு ளாற்பெற
முத்தி சொற்பொருள் முற்றும் பலம்பெறப்
பத்தி யாளர் பரவருட் கற்பக
வத்தி செய்ய வடிமலர் சேருவாம்.

### கதிரைவேற் பாமன் துதி.

பொருவினறு மலர்பொதுளும் தண்டலைசூழ்
கதிரைநகர்ப் புனிதன் பாத
முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து
மாறெழுத்து முணர்ந்து நாவின்
முருகசர வணபவசண் முககுகவென்
றனுதினமு மொழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின்
மீதுவைத்து வணங்கல் செய்வாம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் கந்தப்பெருமான் என்பதைப் பலரும் அறிவர்.

"பேசியே கலியில் வரந்தருந் தெய்வம்
பிறரிலை யெனவுனை யடுத்தேன்
ஆசறு முனிவர் தவஞ்செயுந் தணிகை
யாறுமா முகதயா நிதியே"

என்று தணிகை சந்நிதிமுறை கோஷிக்கின்றது. அதற்கேற்ப முருகன் மானிட வுருத்தாங்கிவந்து நிகழ்த்திய திருவிளையாடலை எழுதுவதற்கு முன் கதிர்காமத்தின் மான்மியத்தைச் சிறிது கவனிப்போம். கதிரைவேற் பரமன் சூர சம்மாரத்தின் நிமித்தம் திருச்செந்தூரிலிருந்து சென்று தங்கிய இடம் கதிர்காமமாகும். பகைவரை வெல்வதற்குப் பாடிவீடாக இருந்ததும் அத்தலமேயாகும். இதனைக் கந்தபுராணம் ஏமகூட படலத்தில்,

"காண்டியீது சூரனூர் கடுங்கணீசர் செறிதலா
லாண்டுசேறன் முறையதன் றதற்கடுத்த வெல்லையா
மீண்டுபாச றைத்தல மியற்றுவித் திருந்தபின்
வேண்டுமாறு புரிதியைய வினையநாடி யென்னவே"

எனவும்

"கலங்கல் கொண்டிடு மகேந்திர வரைப்பினைக் கடந்தேபின்
னிலங்கை மாநக ரொருவியே யளக்கரை யிகந்தேகி
நலங்கொள் சீருடைச் செந்தியிற் றொல்லைமா நகரெய்தி
யலங்க லஞ்சுடர் மஞ்ஞைநின் றிழிந்தன னயில்வேலோன்"

என்னும் வரும் கச்சியப்ப சுவாமிகள் வாக்கால் அறியவும். முருகனது வேலுக்கு நமது அருணகிரி முனீந்திரர் பல திருப்புகழ்களில் வீரச் சுவைதோன்றப் பாடியுள்ளாராயினும் கதிர்காமத் திருப்புகழில்,

"கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவுளே கலாப சித்ர மயில்வீரா" என

வேலுக்கு ஏற்பட்ட வெற்றி முழுவதும் கதிர்காமத்தில் தான் என்றல்லவா நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

கதிர்காமத்தின் சிறப்பினை யெழுதப்புகுந்த யாழ்ப்பாணம் சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ. நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் "புழுத்தனுயினும் கடையேனுகிய நான் எடுத்துரைக்கப் புகுதல் நகை என்பது சத்தியம்" என எழுதுவாரானுல் கடையினும் கடைப்பட்ட அடியேன் எவ்வாறு

எழுதுவது என அஞ்சுகின்றேன், ஆயினும் எனையாளும் கந்தப் பெருமான் காட்டும் திருவிளையாடலைப் பலரும் அறியவேண்டும் என்ற அவா கருதி வரையலானேன்.

## சிகண்டி முனிவர் சரித்திரம்.

தேவவிருடியாகிய சிகண்டி யென்னும் அருந்தவ முனிவர் ஓர் காலத்தில் அகத்தியனரிடம் சென்று தீந் தமிழ் இசையைப்பருகிப் பிறகு கதிரைத்தலம் சென்று கதிர்காமத் தண்ணலைத் தரிசிக்கக்கருதி வனத்திலே செல் லுங்கால் யானையொன்று குறுக்கிட்டு இவரைக் கொல்ல எத்தனித்தது. அதுகாலை அவரது சீடர்களும், அவரும் மிக்க அஞ்சினவர்களாய்க் கதிரைவேற் பரமனைத் தியா னிக்க அவர் அருளால் சடக்கர மந்திரத்தை உச்சரித்துச் சமீபத்திலிருந்த வெற்றிலை யொன்றைப் பிடுங்கி "தான் அறுமுகக் கடவுளின் திருவடியைப் பற்றுக்கோடாக யுடையேனுனல் இவ் வெற்றிலையே வேலாகச் சென்று யானையை அழிக்க" யென சிகண்டி முனிவர் கூறிவிடுத்த னர். அவ்வெற்றிலை வேலாகச்சென்று யானையைக் கிழித் துக் கொன்றது. அந்த யானை முற்பிறப்பில் ஐராவசு என்னும் ஒரு கந்தருவனுக யிருந்தது. பிரகஸ்பதியாகிய வியாழ பகவான் சொல்தவறி நடந்தமையால் அவரது சாபத்தால் இவ்வித காட்டானை யுருவந்தாங்கி நெடுங் காலம் வருத்தமுற்றது. குகனடியாராகிய சிகண்டிமுனி வரின் திருவருளால் அவர் கைப்பட்ட வெற்றிலையே வேலா கச்சென்று அதன் சாபத்தை நீக்கிப் பழைய கந்தருவ னுகச் செய்தது. இதனை அடியில் வரும் கதிர்காம மான் மியப் பாடலால் அறிக.

மதம்பிலிற்றிப் பிளிறியொரு தருமுரித்து
 மறிக்கமுனி மாட்சியாறு
சதஞ்செபித்து முருகடியைத் தரித்துநிலைப்
 பெரியானை தனித்துக்கூறி
நிதந்தனக்கு மிலையெறிய வேலாகிக்
 கிழித்ததுட னேர்ந்த சாற்றிப்

பதஞ்செலவிங் கெவரிலேவேற் கடவுளோ
வெனப்போற்றிப் பதிந்தார்மன்னே.

இதுவுமன்றிச் சங்ககாலத்துச் சமணர் நூலாகிய சீவக சிந்தாமணியும் இதனை வலியுறுத்துகின்றதையும் கவனியுங்கள்.

**சீவக சிந்தாமணி—காந்தருவதத்தையா ரிலம்பகம் (கூஉக)**

நல்லவை புரியும் மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
தல்லவை புரியு மாந்தர்க் கத்திர மொன்றும் வாயா
வெல்வதே குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும் வேலா
மில்லையே வென்றி தீமை யிடங்கொண்ட மனத்தி னூர்க்கே.

கதிர்காமப் பெருமை பலவிருப்பினும் இன்னும் ஒரு சரிதையும் சாற்றுவோமாக.

## வேடன் பூஜை புரிந்தது.

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை அம்மையாரைத் திருமணம்செய்து கதிரைப்பரமன் பல தேவர்குழாங்களுடன் வீற்றிருக்கும் சபையில் தேவர் முதலிய கணங்களை நோக்கி "நமக்கு இப் பெருமையெல்லாம் தந்தது இச் சத்தி வேலாகும்" என்று ஓர் திருவிளையாடலாகக் கூறியருளினர். அதனைக்கேட்டு அருகிருந்த பிரமன் "இவ் வேலிற்கு இந்நிலை என்றால் வந்ததன்றோ" எனத் தனது அறியாமையாலும் அகங்காரத்தாலும் உரைத்தான். குமரனார் அதுகேட்டுச் சிறிது வெகுளியுற்று "ஆணவ மலத்தாற் கட்டுபட்ட கிழோய்! என்ன மொழிந்தனை? எனது கரத்தில் பிரியாதுறையும் ஞானசக்திக்கு நீ கொடுப்பதொரு சக்தியும் உண்டோ? முன்னர் சிறையிருந்ததை மறந்தனைபோலும். நீ பூமியில் வேடனாகப்பிறந்து அலையக் கடவாய்" என்று சபித்தருளினர். பிரமன் நடுநடுங்கிச் சாமிநாதன் திருவடிகளில் தஞ்சமென விழுந்து புலம்பினன். கருணையங் கடவுளாம் கதிரை நாயகன் திருவுளம்

இரங்கி பிரம்மனே, நீ இப்பாவத்தைச் செய்தமையால் அனுபவித்தே தீர்த்தல்வேண்டும். பின்னர் நின்னை யாட் கொள்வோம் யென்று கூறியருளினர். பிரமன் தன் னுரு மாறி அந்திமான் என்னும் வேடனாகப் பிறந்தான்.

அவ்வேடன் வனத்தில் கொலைத்தொழில் செய்து கொண்டு திரிந்தகாலத்தில் ஒருநாள் பட்டினியாலும், பசியாலும் வருந்தி இருக்குங்கால் பிப்பிலாத முனிவர் அவ்வழி வந்தனர். அவரிடம் யாதேனும் பொருளாவது உணவாவது இருக்குமென்று நினைத்து ஓடிச்சென்று அவர் தம் உடலைப்பற்றிக் கையால் இறுகக்கட்டினன். முனிவர் சுப்பிரமணியக்கடவுளின் திருவருள் பெருமை களை எல்லாம் எடுத்துரைக்கும் பாக்களைப் பாடினர். அத னைக்கேட்ட வேடர்க்குப் பழைய நல்லுணர்வுதோன்றி தான்செய்த செய்கைக்குப் பெரிதும் வருந்தி முனிவர் அடிகளில் விழுந்துவணங்கி அவரால் தன் பண்டைய வர லாறெல்லாம் உணர்ந்தான்.

முனிவர்பெருமான் அவ்வேடனுக்குச் சடக்கர மந்தி ரத்தை உபதேசித்துக் கார்த்திகை விரதத்தை அனுஷ்டிப் பையேல் உன் பாவம் நீங்குமெனக் கூறிச்சென்றனர். அங் ஙனமே அவ்வேடன் ஆற்றுவானாயினன். இங்ஙனம் பிர மன் பூமியிற்றங்கலால் சிருஷ்டித்தொழில் நடவாதாயிற்று அதனால் காத்தற்றொழிலும், சங்காரத் தொழிலும் இல்லை யாயின. எனவே வருணன், சோமன், இந்திரன், திருமால் முதலியோர் சித்தன் வாழ்வென்னும் திருப்படைவீட் டுத் தலமாகிய பழனித்தலம் சென்று தேவநாயகனைச் சேவித்தார்கள். பழனிப்பெருமான் அவர்களுக்குப் பால பருவமும், நான்கு திருக்கரங்களும், பொன்போலும் காந்தியும், வேலாயுதமும், கோழிக்கொடியும், வரதமும் அபயமும் பொருந்திய திருக்கரங்களை உடையவராய்த் தோன்றியருளினர். தேவர்களெல்லாம் போற்றித் துதித் தனர். இதனைத் திருமுருகாற்றுப்படை திருவாவினன்குடி பாசுரத்தில் பரக்கக் காணவும். சுப்பிரமணியக்கடவுள் அந்திமானாகிய வேடனை அழைத்துச் சாபம் நீக்கிப் பிரம்ம

ளுக்கி முத்தொழிலும் நடக்குமாறு திருவருள்செய்து மறைந்தனர். இதனை நமது அருணகிரிப் பெருந்தகையார் 433-வது பாடலில்,

"மகபதியாகி மருவும்வலாரி
மகிழ்களி கூறும் வடிவேோனே
வனமுறைவேட னருளியபூஜை
மகிழ்கதிர்காம முடையோனே"

என்றல்லவா பாடி மகிழ்கிறார்.

கதிரைவேற் பரமன் திருவருட்செயல் பலவிருப்பினும் அவையெல்லாம் இச்சிறு நூலில் எழுதிமுடிக்க இயலாமைக்கு வருந்துகின்றேன். ஆயினும் இரண்டொன்றைச் சொல்லிக் காட்டுவழிவந்த கடவுளைப் பார்ப்போம்.

## அநுமான் அருள்பெற்றது.

இலங்கையில் இராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டசீதாதேவியைத்தேடுவதற்கெனப் பல குரங்குக்கூட்டங்களை அனுப்பிய அநுமான் தான் இலங்கையை நோக்கி வருங்காலத்துக் கதிர்காமத்தப்பனை வணங்கி அவரருள்பெற்றுச் சென்றதாய் 420-வது திருப்புகழில் திருப்புகழ் ஆசிரியர் பாடுவதையும் அவர்வாக்கால் கேளுங்கள்.

அடிக்குத் திரகார ராகிய
வரக்கர்க் கிளையாத தீரனு
மலைக்கப் புறமேவி மாதுறு வனமே சென்
றருட்பொற் றிருவாழி மோதிர
மளித்துற் றவர்மேல் மனோகர
மளித்துக் கதிர்காம மேவிய பெருமாளே.

## பரம ரகஸ்ய ஸ்தலம்.

இக் கதிர்காமத்திற்கு 29 திருநாமங்கள் அமையப் பெற்றுள்ளன. அவற்றை ஈண்டு விரிக்கப்பெருகும். அவற்றுள் வன்னிமங்கலம் எனும் சிறப்புப்பெயர் உளது. வன்னியெனவே அக்கினிப் பிழம்பாகிய ஜோதியெனப் பொருள் படும். திருப்புகழ் 643-ல்,

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருப கிரி யிடமேவு முகமாறும்
சுரர்தெரிய லளிபாட மழலைகதி நறைபாய
துகிரிதழின் மொழி வேத மணம்வீச

என்றல்லவா நமது ஆண்டவனை அருணகிரியார் வருணிக்கின்றார்.

இவ்வாறு சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருக்குந் தலத்திற்குக் கதிர்காமம் யெனவே கதிர்-ஒளி, காமம்-இன்பம் எனப் பொருள்படா நிற்கும். ஆன்மாக்களுக்குச் சிவஞான ஒளியினால் பேரின்பத்தை யளிப்பதுயெனவும் பரஞ்சுடராகிய கந்தக் கடவுள் விரும்பியுறைவது எனவும் ஆன்றோர் கூறுவர். அன்றியும் துரியப் பொருளாகிய குக ஞானமென்னுஞ் ஜோதி வியாபித்தலாலும், குக சாயுச்சமென்னும் இன்பத்தைக் கொடுத்தலாலும் வந்த காரணப் பெயரெனவும் அருணகிரி வள்ளல் நமக்கு 425-வது கதிர்காமத் திருப்புகழில் விளக்குகிறார்.

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனோ.

கந்தபுராணம் ஏமகூட படலத்தில் கூறுமாறு பதினெண்கணத்தவர்களுடன்நமது கந்தப்பெருமான் ஆங்குச் சென்று படைவீடுகொண்டு சூரனைச் சம்மரித்துத் தேவர்

களுக்கெல்லாம் தரிசனம்தந்த பரமரகஸ்ய தலமாதலால் அத் திருக்கோலத்தை மானிடராகிய சிறியேங்கள் தரிசித்தல் இயலாதென்றே மூலஸ்தானம் அடைக்கப்பட்டுமூர்த்தியும் அவ்வியக்தமாயினர். அதனால்தான் ஆங்குத் திரையில் வள்ளி தேவசேனா சமேதராகிய சுப்பிரமண்யக் கடவுளை எழுதி அத் திருவுருவத்திற்கே தூபதீப ஆராதனைகள் யாவும் நடத்தி வருகிறார்கள். ஆங்குள்ள மூர்த்து ஆறுமுகக்கடவுளே என்பதும், நாளதும் தேவர்கள் பூசித்து வருகிறார்களென்பதும் சுப்ரமண்ய பக்தர்கள் கண்ட நிலையாகும். சிவஸ்தலங்களில் மகா ரகஸ்யஸ்தலம் சிதம்பரம் என்பதேபோல் முருகன் தலங்களில் பரமரகஸ்யஸ்தலம் கதிர்காமமாகும்.

## கதிர்காம யாத்திரையின் கஷ்டங்கள்.

இத்தகைய அரும்பெருஞ் சிறப்பினைவாய்ந்த கதிர்காமத்திற்குச் சென்று ஆண்டவனைத் தரிசிப்பது ஆதியில் மிகக்கடினம். ஏனெனில் சிலோன் மாத்தறை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு சமார் 75-மைல் காட்டு வழிசென்று தரிசித்துவிட்டுத் துஷ்ட மிருகங்களால் இன்னலுறாமல்வந்து சேர்வது அக்காலத்தில் கஷ்டமாகையால் ஆண்டவன் கனவில்வந்து உத்தரவு செய்பவரே போய் வருவது வழக்கமென முன்னோர் கூறியுள்ளனர். அதற்கேற்ப கதிர்காமப் பிள்ளைத்தமிழில் ஆங்குள்ள மாணிக்க கங்கையின் மகிமையைப்பற்றியும் வாய்ஊமர் பாடவும், குருடர் கண்பார்த்திடவும், மலடிகள் மைந்தனைப் பெறவும், நிகழ்ந்த அற்புதங்களையும், அந்நலனைப்பெறுவதற்காக காட்டிற் செல்வோர் கரடி, புலி, யானை இவைகளைக் கண்டு அஞ்சி நடுங்குதலும், அவைகள் ஒன்றுஞ் செய்யாமல் ஒதுங்கிப்போவதும் ஆகிய இவ்வற்புதங்களை அடியில் வரும் பிள்ளைத்தமிழில் படியுங்கள்.

## கதிர்காமப் பிள்ளைத்தமிழ்.

“ மாணிக்க நிறைகங்கை யாகியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயூமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவுங்
காணிற்கு மாரவே லாவென் னு மன்பரைக்
கரடி புலி யானை சிங்கம்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு
னடியேனை யாண்டு கொண்டே
ளுகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.”

இதனையே திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் முருகன் அருள்வேட்டல் கதிர்காமப் பதிகத்தில்

நீலமயக் கடலினிலே நீண்டெழுந்த
பவளமலை நின்னைநாடிச்
சீலமுடன் இருங்காட்டில் செல்வோரைக்
கரிகரடி சிறுத்தை வேங்கை
பாலணுகிப் பாயாது பத்தியிலே
மூழ்கி நிற்கும் பான்மை யென்னே
காலமிடங் கடந்தொளிருங் கதிரைவேற்
பெருமானே கருணைத் தேவே”

என்றும்

விழியில்லார் விழிபெற்ருர் செவியில்லார்
செவிபெற்ருர் விளம்பும் வாயில்
மொழியில்லார் மொழிபெற்ருர் முருக ! நின
தருளாலே, மூடநாயேன்
வழியில்லா வழிநின்று வளர்த்தவினை
வேரறுப்பாய் வரதா ! மூங்கில்
கழிவில்லார் களியாடுங் கதிரைவேற்
பெருமானே ! கருணைத் தேவே

என்றுங் கூறிக் கதறுகின்ருர்.

## ஸ்ரீமதி வி. ஜி. பத்மாவதி அம்மையார் கதிர்காம யாத்திரை.

கதிர்காமப் பெருமையெல்லாம் போதும். இனி அப் பரமனை அன்புடன் தரிசிக்கச் சென்றவரும், ஆண்டவன் அன்பிற்குப் பாத்திரமானவரும், சென்னைப் புரசை ஷண்முகக் கோட்டத்தமர்ந்த கந்தப் பெருமானை நித்தமும் நீரணி மலர்கொண்டு அருச்சனை புரிபவரும், அப்பெருமானுக்குப் பலவித திருப்பணிகள் ஆற்றியுள்ளவரும் அடிக்கடி சிவம் போற்றி, விழா போற்றி, அடியார் போற்றி வாழ்ந்து வருபவரும், முருகனடியாராகிய முருகம்மையாரின் அவதாரமாய் விளங்குபவரும், சென்னை பர்மா ஷெல் கம்பெனி ஏஜெண்டாக இருந்த பெருஞ் செல்வவந்தராகிய வேளாளர்மரபு ஸ்ரீமான் C. கோவிந்தராஜு முதலியார் அவர்களின் மனைவியாருமாகிய ஸ்ரீமதி பத்மாவதி அம்மையார் அவர்கள் கதிர்காமத்திற்குச் சென்றதும், கதிர்காமத்தப்பன் காட்டு வழியில் வந்து துணைபுரிந்து உதவியதுமாகிய அற்புதங்களை அன்பர்கள் கேட்டு மகிழ எழுதுகின்றேன்.

மேற்படி அம்மையார் அவர்களும் அவரது செல்வக் குமரர் ஜகதீசன் அவர்களும் கதிர்காம யாத்திரைக்காகப் பிரமாதி ஆவணிமீ 1939 செப்டம்பர்மீ 12, புறப்பட்டுச் சென்றனர். சிலோனைக்கடந்து தற்போது காட்டு

வழிகளெல்லாம் சீர்படுத்தப்பட்டு இன்னும் பதின்மூன்று மைல்களே காட்டு வழியாக இருப்பதால் திசைமாரு வரையில் காரில் சென்று திசைமாருவில் ஒரு வண்டியை அமர்த்திக்கொண்டு மாலைப்பொழுதில் காட்டு வழி செல்வாராயினர். காட்டில் செல்லச்செல்ல இருளும் அதிகரிக்க எவ்வாறு போவதெனக் கதிர்காமத்தப்பனை எண்ணிக்கொண்டே போவாராயினர். அதுகாலை நமது கலியுக வரதன்; கண்கண்ட தெய்வம்; கதிர்காமத்தப்பன்; அக்காட்டிலுறையும் மனிதரைப்போல் சரிய பெரிய திருமேனியுடன் விபூதி, குங்குமம் முதலியன அணிந்து அம்மையார் வண்டிக்குப் பின்னால் வருவராயினர். அவரைக் கண்டதும் அம்மையார் தனக்குத் துணையாக வந்தவர் நடந்து வருகிறாரே என்ற கவலையுடன் வண்டியில் ஏறிக் கொள்ளும்படி அவரைப் பலமுறை வேண்டியும் அவர் "தான் இக்காட்டில் வசிப்பவரென்றும் தனக்கு யாதொரு பயமும் இல்லையெனவும்" கூறிக்கொண்டே பின் செல்வாராயினர். அவனை அன்புடன் ஆராதிப்பவர்க்கு துணை புரிவதும் அவன் கடமையன்றோ?

அம்மையார், அவர் நன்றாகத் தமிழ் பேசுவதைக் கேட்டு, இப்பக்கங்களில் எல்லோரும் சிங்களபாஷை பேசுகிறார்களே தாங்கள் மட்டும் எப்படித் தமிழ்பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, எனக்கு எல்லாம் தெரியும் என்றாராம். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க்கும் முதல்வன் அவனல்லவா?

"மாதுமைதந்த பாலமுதுண்டு மண்டலம் விண்டலம் வியப்பக்
கோதிலாத் தமிழை இசையொடும் விரித்த குமர"னல்லவா?

பொய்யாமொழியை மடக்கி அவருக்குப் புலமை கற்பித்த புண்ணியனல்லவா? அதனாலன்றோ நக்கீரரும் புலவர் சிங்கமே எனப் புகன்றனர்.

இவ்வாறு காட்டுவழி செல்லச் செல்ல இரவும் அதிகரிக்க அவர் காட்டிய அற்புதத் திருவிளையாடலை இங்குச் சற்றுக் கவனியுங்கள்.

அக்காட்டின் மத்தியில் கள்ளிக்கோட்டை ஒட்டினுல் ஒரு புதிய கொட்டகை அமைத்து அதில் ஈச்சேர் என்னும் சாய்ப்பு நாற்காலி முதலிய சாதனங்களையும் புதிய அரிக்கன் விளக்கையும் ஆங்கு இட்டு அம்மையார் அவர்களையும், அவர் தம் மைந்தரையும் அக்கொட்டகையில் தங்கும்படி ஏற்பாடுசெய்து தானும் வண்டியோட்டிச் சென்றவனுடன் வெளியில் நின்று காவல்புரிந்தார் என்ருல் எனையாளும் கந்தப்பெருமான் திருவருட் செயலை எவ்வாறு எம்மொழிகளால் எழுதிப் புகழ்வதென எமக்குத் தோன்றவில்லை. அத்துடன் நின்ருரா. இன்னும் அவர் காட்டிய அருட்டிறத்தையும் கேளுங்கள்.

அக்காட்டிலுறையும் சிங்களவப்பெண் போன்ற உடையுடன் உருத்தாங்கிய வள்ளி அம்மையார் தீஞ்சுவை கொண்ட அப்பத்துடனும் மலைப்பழங்களுடனும் கொட்டகைக்குள் வந்து அம்மையார் பசிக்கு உதவியருளினர். அதைப் பெற்றுக்கொண்ட அம்மையார் தாங்கள் யாரென வினவ, நான் இக்காட்டில் வசிப்பவளென்றும் இதற்கு முன்னே வந்த பெரியார் தன் பர்த்தாவென்றும் அவர்தாம் இப்பட்சணங்களைத் தங்களுக்கு அளிக்க உத்தரவு செய்தாரென்றும் கூறிக் கொடுத்துவிட்டுச் சென்றனர். அம்மையாரும் அதை அன்புடன் வாங்கித் தானும் தம் மைந்தனும் உண்டு வண்டிக்காரனுக்கும் கொடுத்து மிகுதி இருந்த இரண்டு அப்பத்தையும் கதிர்காமம் சென்று உண்போமென வைத்துக் கொண்டார்களாம். அச்சுவை அதிக இன்பத்தை அளித்ததென்ருல் ஆண்டவன் அருளால் கிடைத்த அமிர்தம் அது என்பதில் ஆச்சரியமென்ன? அம்மையார் திரும்பி வருங்கால் அப்புதிய கொட்டகையும் அங்கில்லையாம்.

இத்திருவிளையாடல் திருக்குருகாவூருக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கடுமையான வெயிலில் செல்லுங்கால் சிவபிரான் சோலையும் தணணீர்ப் பந்தலும் அமைத்துக் கட்டமுதும்அவர்அடியார்களுக்குப் பறிமாறிச் சுந்தரரும் அடியார்களும் நித்திரை செய்யும் சமயத்தில் அப்பந்த

னுடன் பரமன் மாயமாய் மறைந்ததையல்லவா ஞாபகப் படுத்துகிறது. நாஸ்திகம் பேசும் நண்பர்கள் இதற்கு யாது பதில் கூறுவர்; புராணக் கதைகளையெல்லாம் பொய் யெனச் சாற்றும் சகோதரர்கள் என் சொல்வர்; நாஸ்தி கர்களே! உங்கள் வாதம் வேண்டாம்! வேண்டாம்!! கலி யுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய கருணையங் கடவுளாம் எங்கள் கந்தப்பரமனை நம்பி ஆஸ்திகத்தில் திரும்புங்கள். உங்கள் மயக்கம் நீங்கி நற்கதியடைவீர். கடுமையான வெய்யிலில் கஷ்டப்பட்டவர்க்குச் சிவபெருமான் அருள் புரிந்தாரென்றால் அவர் மைந்தராம் குமரன் காட்டிலும் நள்ளிருளிலும் நடப்பவர்களுக்குத் துணையாக வந்தல் லவா அருள்புரிகின்றார். இங்கு இன்னொரு அற்புதத்தை யும் எடுத்துக் காட்டுகின்றோம்.

இவ்வாறு பக்தர்களுக்குத் துணையாக வந்துதவியது பல இடங்களிலுண்டு பஸ் முதலிய சாதனங்கள் இல் லாத 1930-ம் வருடத்திற்குமுன் எனது நண்பர் குயப் பேட்டை குகஸ்ரீ இராஜு பதகர் அவர்கள் சில நண்பர்க ளுடன் மதுரைக்குச் சென்று இரவு 7 மணிக்குமேல் திருப் பரங்குன்றத்திற்குச் சென்ற காலையில் இருளும் வந்தடைய வழியில் ஜனநாட்டமில்லாததால் எப்படிப் போவதென ஏங்கி நிற்கும் சமயத்தில் பின்னால் ஒருவர் செட்டி வேடம் தாங்கி நீங்கள் எங்கே போகிறீர்கள்; நானும் திருப்பரங் குன்றம் வருகிறேனென தொடர்ந்து சென்று ஆலயத் திற்கு முன்னிருந்த கடைக்காரரிடம் தேங்காய் பழங்களை யும் வாங்கித் தந்து சரவணப் பொய்கை வரையில் வந்து "நான் மதுரையில் இன்ன இடத்தில் கடை வைத்திருப் பவன்; நான் போய்க் கடையை மூடவேண்டும்; தாங் கள் சுவாமி தரிசனம் செய்துகொண்டு நிதானமாய் வாருங்கள்" என்று சொல்லிச் சென்றார். இவர்கள் மறு நாள் மதுரைக்குச் சென்று அவர் தெரிவித்த விலாசப் படி பார்க்க அவ்விடம் அத்தகைய செட்டியாரும் கடையு மின்றி ஆச்சரியப்பட்டு ஆண்டவன் திருவருளை எண்ணி எண்ணி மனமுருகித் துதித்தனர்.

கதிர்காமத்தில் காட்டுவேழிக்கேற்ற கோலம்தாங்கி ஞர் என்ருல் மதுரையில் வணிகர் குலத்தில் அவதரித்து இறையஞர் அகப்பொருளுக்கு விளக்க உரைகண்டவ ராகையால் வணிகர் கோலத்துடன் வந்தார்போலும் கந்தரலங்காரத்தில்,

"விழிக்குத்துணைத் திருமென்மலர்ப் பாதங்கள்மெய்ம்மைகுன்ரு
மொழிக்குத்துணை முருகா வெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணை யவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே"

என்று கூறிய அருணகிரியார் அருள்வாக்கு தெய்வவாக் கல்லவா.

நமது கதிர்காமத்தப்பன் இன்னும் அம்மையாரிடம் காட்டிய அருள்விளையாடலைக் கவனிப்போம்.

அம்மையார் அக் கொட்டகையில் தங்கி விடியற் காலை 2-மணிக்கு விழித்தெழுந்து பார்க்கிறபோது துணை யாக வந்தவர் அங்கில்லை, இரண்டு சாமியார் அங்கிருந்த னர், காவலாக அவர்களை ஆண்டவன் அமர்த்தினர் போலும். வண்டிக்காரன் அதற்குமேல்வண்டியைக்கட்டிக் கொண்டு கதிர்காமம் சென்று புனிதத் தன்மைவாய்ந்த புண்ணிய நதியாகிய மாணிக்க கங்கையில் நீராடிக் கதிர் காமத்தப்பனையும், இதர ஆலயங்களையும் தரிசித்துக் கொண்டு இரவில் அம்மையார் அளித்த அப்பம் மிகுதியா யிருந்த இரண்டையும் புசித்துவிட்டு, அன்றும் மாலைப் பொழுதிருக்கும் சமயத்தில் வண்டியைக் கட்டிக்கொண்டு திரும்பிவிட்டார். முன்னாள் தாம் இருட்டில் கஷ்டப் பட்டோமோ என்ற கவலை அம்மையாருக்கு ஏற்படவில்லை. ஏனெனில் அன்றிரவும் சில அற்புதங்களை நிகழ்த்திய நமது அறுமுகத்தண்ணலின் ஆடல்போலும்.

## மறுநாள் நிகழ்த்திய திருவிளையாடல்

அன்றே திரும்பி வருங்கால் மீண்டும் இரவு 10 மணிக்குக் காட்டில் அகப்பட்டுக் கொண்டார். அதுசமயம் அமாவாசை நெருக்கமான காலம். தான் முன் தங்கிய கொட்டகையைப்பார்த்தபோது அதுவும் அங்குக்காணப் படவில்லை. குறித்த இடமாகிய திசைமாறு வருவதற்கு இன்னும் ஏழுமைல் தூரம் இருக்கிறது. அச்சமயம் முன்பு துணையாக வந்த பழைய ஆளே வண்டியைத் தொடர்ந்து வருகிறார். அது சமயத்தில் பெரிய கரடி ஒன்று வண்டி பக்கம் வருவதைக் கண்டதும் அதன் காலடி சப்தத்தைக் கேட்டு அம்மையாரின் மைந்தன் அலறலுற்றான். அதுகாலை அம்மையார் "காட்டில் யாத்திரையில் கரடிக்கு உணவாக நாம் மரித்தாலும் புண்ணியமுண்டு. வீட்டிலும் ஒரு காலத்தில் நாம் சாகத்தானே போகிறோம்" என்று மணமுடித்து ஓராண்டு நிரம்பாத தன் மைந்தனிடம் வேதாந்தம் பேசுவாரானால் அம்மையாரிடத்திருக்கும் மனஉறுதியும் ஆண்டவன் பக்தியும், அன்பின் கருணையும் இருந்தவாறென்னே! பெருந்தனக்காரர்களிடம் இத்தகைய அருங்குணங்கள் அமைவது ஆச்சரியமல்லவா?

உடனே தொடர்ந்துவந்த நமது வேற்படை வீரன் ஓர் குச்சியை எடுத்து அந்தக் கரடியை ஓட்ட அது காட்டிற்குள் சென்று மறைந்துவிட்டது. இன்னும் சிலதூரம் செல்ல அங்குத் தாம் கொண்டுவந்த வாடகைமோட்டார் நிற்பதைக்கண்டு வழித்துணையாக வந்த நாதரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு திரும்பி விட்டார். உடனே அம்மையார் மோட்டாரில் ஏறிக்கொண்டு நான்கு மைல் தூரத்திலுள்ள குறித்த இடமாகிய திசைமாறுவுக்கு வந்து சேர்ந்தார். அப்படி வண்டி வருவதற்குள் நமது செவ்வேட்பரமன் அங்கும் வந்து நிற்கின்றானென்றால் அச்சமயத்திலுங்கூட அம்மையார் அவரைத்தெரிந்துகொண்டு அவரது அடிகளில் வீழ்ந்து வணங்காமல் போனது ஓர் பெருங் குறையே என்னலாம்.

அம்மையாருக்கு இருமுறையும் இருட்டில் துணையாக வந்தவர் யார்? இந்த நடுக்காட்டில் கொட்டகையமைத்துக் கொடுத்தவர் யார்? தன் மனைவியிடம் பட்சணம் கொடுத்தனுப்பியவர் யார்? கரடியை வரச்செய்தவர் யார்? அதை ஒரு குச்சியால் ஒட்டித் துரத்தியவர் யார்? நாலு மைல் தூரம் மோட்டார்வண்டி வருவதற்குமுன் வந்தவர் யார்? என்ற எண்ணமே தனது மனத்தில் உதிக்காமல் மாயையில் கட்டுப்பட்டிருந்தாரென அறிகிறோம்.

இத்தகைய திருவிளையாடலை நிகழ்த்திய நமது சொந்த தெய்வமாகிய கந்தப்பெருமானை எவ்வாறு எம்மொழிகளால் எழுதுவதென எண்ணும் சமயத்தே நமது தெய்வப் புலவராகிய நக்கீரரின் திருவாக்கு நினைவிற்கு வருகின்றது. அம்மொழிகளால் அவரைத் துதித்து மேலே செல்வோம்.

" நீண்ட பெரிய இமயமலை உச்சியில் நாணல் வளர்ந்த பசிய சுனையின் கண்ணே (சரவணப் பொய்கை) பஞ்ச பூதங்களுள் ஒன்றாகிய அக்கினிக்கடவுள் தனது உள்ளங் கையில் கொள்ள அருந்ததி ஒழிந்த கார்த்திகை முதலிய ஆறு மங்கையரால் வளர்க்கப்பட்ட ஆறு உருவங்கள் பொருந்திய செல்வனே!, கல்லால மரத்தின்கீழ் எழுந்தருளியிருந்த சிவபெருமானின் புதல்வனே!, பெரிய மலையாகிய மலையரையனின் மகளான பார்வதி தேவியின் குமாரனே!, பகைவர்க்கு இயமனே!, வெல்லும் போரைச் செய்பவளும் உலகுக்கு வெற்றியைத் தருபவளும் ஆகிய வனதுர்க்கையின் புத்திரனே!, ஆபரணம் அணிந்த சிறப்பினையுடைய காடுகாளின் குழந்தையே!, தேவர்களின் படைத்தலைவனே!, வளையும் வில்லையுடைய தலைவனே!, இன்பத்திற்குரிய கடப்ப மாலையை அணிந்த திருமார்பனே!, ஞான நூல்கள் அனைத்தையும அறிந்த புலவனே!, போரில் ஒப்பற்றவனே!, போர்செய்கின்ற வெற்றிபொருந்திய திண்ணியனே!, அந்தணர் பெருஞ்செல்வமே!, சான்றோர் புகழ் மலையே!, தெய்வயானையார் வள்ளிநாய்ச்சியார் என்னும் இருமகளிர்க்கும் கணவனே!, வீரர்க்கு ஆண்

சிங்கமே!, வேல் பொருந்திய அகன்ற கையுடைய பெருஞ் செல்வனே!, கிரௌஞ்சகிரியைப் பிளந்த குறையாத வெற்றியினையுடைய தலைவனே!, தேவர் உலகத்தைத் தீண்டும் நீண்ட மலைகளையுடைய குறிஞ்சி நிலத்திற்கு உரிமை உடையவனே!, பலரும் பாராட்டும் நல்ல மொழி களையுடைய பிறமதத்தில் இருப்பவர்க்கு ஆண் சிங்கத் தின் தன்மை யுடையவனே!, ஏனையோர்க்கும் பெறுதற்கு அரிய முறையினையுடைய வீடென்னும் பெரும் பொருளை யுடைய முருகனே!, வீட்டை விரும்பி வந்தவர்க்கு அதனை அநுபவிக்கச் செய்யும் பெரும்புகழினை யாள்பவனே!, பிறரால் துன்புறுத்தப்பட்டு வந்தவர்க்கு அருள்செய்பவ னும் மிக்குச் செல்கின்ற போர்களை முடித்துப் பகைவரை வென்று கொல்கின்ற நினது மார்பினிடத்தே பொன்னாப ரணங்களை யணிந்தவனும் ஆகிய சேயே!, நின்வயம் வந்த இரவலர்க்கு விருப்பினதை அருளிக் காக்கின்ற கண் டார்க்கு அச்சம் பொருந்திய நீண்ட வடிவத்தினையுடைய வேளே!, சான்றோர் போற்றும் பெரிய திருநாமம் உடைய தலைவனே!, போர்வினையிலே மிகுந்த வலிமையாலே சூர பதுமனின் குலமானது இல்லையாமாறுசெய்த மதவலி எனும் திருநாமத்தை யுடையவனே!, வீரருக்கு உவமிக் கப்படுபவனா யிருப்பவனே!'' என்ற தெய்வ அருள் மொழிகளாகிய மலரால் அவனிருபாதத்தில் அருச்சனை புரிந்து மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குவோ மாக.

வள்ளி யம்மையாரைத் திருமணஞ் செய்ய வேடனாக வும், வேங்கை மரமாகவும், வளையல் விற்கும் செட்டியாக வும, தள்ளாக் கிழவனாகவும், வேடம்பூண்ட நங் குமரவேள் இக்காலத்தில் அவன் நடிக்கும் அருள் நாடகத்தில் எடுத்த வேடங்களைக்கவனிப்போம். கதிர்காமத்தில் ஓர் குமாஸ்தா வாக வந்து பழைய பத்திரங்களைக் காட்டிச் சாட்சி சொல் லியும், ஒரு பெண்பாலுக்கு மூட்டை தூக்கும் ஆளாக வந்து கூலி கொடுக்கப்போகும் சமயத்தில் நான் கோவி லண்டைதான் இருப்பேன் வாவென்று சொல்லி மறைந

தும், திருச்செந்தூரில் ஆபரணம் அளித்த ஆண்டியாக வந்தும் ஒரு பக்தருக்கு விளக்குப் பிடித்து வழிகாட்டியும் மதுரையம் பதிக்கு மோட்டார் ஓட்டும் டிரைவராகக்கூட வேடம் தரிப்பானென்றால் இக்கள்வனின் அற்புதச் செயல் அளக்கற் பாலதன்றே.

## கதிர்காமத்தின் இரண்டாம் யாத்திரை

முதல் யாத்திரையில் பல அற்புதங்களை யெல்லாம் அநுபவித்த ஸ்ரீமதி வி. ஜி. பத்மாவதி அம்மையாரவர்கள் மீண்டும் அப்பரமனைத் தரிசிக்க ஆவல் கொண்டமையால் விக்கிரம வருஷம், ஆடி மாதம், பருவத்தில் அங்கு நடைபெறும் விசேஷ உற்சவத்தைத் தரிசிப்பதற்கெனத் தனது மைந்தராகிய ஸ்ரீமான் கண்ணப்ப முதலியார் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றார். அதுகாலை ஆங்கு உற்சவ சமயம். ஆகையால் பெருந்திரளான ஜனக்கூட்டங்கள் "அரோகரா" "அரோகரா" என்ற சப்தத்துடன் காட்டுவழி போய்க்கொண்டிருந்தமையால் யாதும் பயமின்றி எத்தகைய கஷ்டமுமின்றிக் கதிர்காமம் போய்ச் சேர்ந்தனர்.

கதிர்காமத்தின் சரித்திரப் பூர்வமான ஆதாரங்களை ஆராய்ச்சி செய்தபோது "கதிரைமலைப் பள்ளு" என்ற பிரபந்தத்தில் பின்வரும் விஷயம் காணக் கிடக்கின்றது.

இற்றைக்குச் சுமார் 317 ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீசிருங்கேரிமடத்துப் பிராமண சந்நியாசி கலியாணகிரி என்பவர் கதிர்காம யாத்திரை சென்று அங்குத் தங்கி அறுமுகப் பரமனைக் குறித்து 1008 முறை சடக்கர மந்திரத்தைச் சபித்து 12 வருட காலம் அருந்தவம் புரிந்தார். அவ்வாறு நிகழ்ந்துவருங் காலத்தில் ஒருநாள் யோகநித்திரையில் இருக்குங்கால் நமது குமரன் வேடுவப் பிள்ளையாகவும், வள்ளியம்மையார் வேடுவச் சிறுமியாகவும், வந்து அவர் நித்திரையைப் பங்கப்படுத்த அச்சந்நியாசிக்கு மிகவும் கோபம் அதிகரித்து அவ்வேடுவனைத் துரத்திச்

செல்லலும் அவன் பல பரிகாசமொழி புகல மீண்டும் கோபம் அதிகரித்து வேகமாய்த் துரத்திச் செல்ல மாணிக்க கங்கையை அடைந்ததும் அங்கு மணங்கமழும் தெய்வத்திள நலம் காட்டி முருகனும் வள்ளியுமாக கலியாணகிரிக்குக் காட்சி கொடுத்தனர். கலியாணகிரியும் அடியற்ற மரம்போல் கீழே விழுந்து பன்முறை அவர்களைப் பணிந்து கண்ணீர் பெருக, ஸ்தோத்திரம் புரிவாராயினர். நமது கந்தப்பெருமானும் அவர் கோரிக்கை யாதெனவினவ, கதிர்காமத்தப்பனைத்தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்த் தன் தேசத்தில் பிரதிஷ்டைசெய்து ஆங்குப் பூசிப்பதே தனது கருத்தாகுமென, எடுத்துக் கூறினர். இக்கோரிக்கையை வெளியிட்டதும், வள்ளி நாய்ச்சியார் தனது மாங்கில்யத்தைத் தொட்டுக் காட்டி, எனது கணவனை அழைத்துச் செல்லும் அத்தகைய எண்ணம் கலியாணகிரிக்குத் தகாது எனக்கூறிக், கதிர்காமத்திலிருந்தே பூசிக்கவேண்டுமென உத்தரவிட்டு, முருகரும் வள்ளியும் மறைந்தனர்.

அதுமுதல் அப்பெரியார் ஆலயப் பூஜா காரியங்களையும் திருப்பணிகள் பலவற்றையும், செய்துகொண்டு தனக்கென கலியாண மண்டபம் என்ற மடத்தையும் கட்டிக் கொண்டு, அதில் தங்கித், தெய்வயானையம்மன் சன்னிதி, விநாயகர் ஆலயம் முதலியன சீர்திருத்தி வருங்காலத்தில் அவர் தேகவியோகம் அடைந்தார். அவர் அடைந்ததும் அவர் தேகம் முத்துமயமாகப் பிரகாசம் தோன்றினமையால் இவருக்கு முத்துலிங்க ஸ்வாமிகள் எனப் பெயர் ஏற்பட்டு அவர் அடைந்த இடத்தில் முத்துலிங்க ஸ்வாமிகள் சந்நிதியும் கட்டப்பட்டுள்ளது.

அம்மடாதிபதிகளாய்ப் பிறகு பிராமண சந்நியாசிகள் மூவர் ஏற்பட்டுக் கோவில் ஆதிக்கங்களைக் கைப்பற்றிப் பூஜா காரியங்களை நடத்தி வந்ததாகத் தெரிகிறது.

அதன்பிறகு 1934-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் தேதி கதிர்காமக் கோவில் சம்பந்தமாக ஒரு வழக்கு

ஏற்பட்டுக் கொழும்பு, வதுளை முதலிய இடங்களிலுள்ள ஆறு பேர் தரும பரிபாலகராக நியமனமானதாய் அறிகிறோம்.

அதற்குப்பிறகு தான் "கப்புராள்" என்ற சிங்களவப் பூசாரிகள் வள்ளிநாச்சியாருக்குப் பூசை செய்துகொண்டிருந்து "அக்காளுக்குப் பூசை செய்யும் எங்களுக்கு அத்தார் பூசைக்கும் உரிமை உண்டெனக் கூறிச் சுவாமி சந்நிதி பூசையையும் கைப்பற்றிக்கொண்டு பிரதி வருட ஆடி மாத பருவத்திலும் உண்டியில் வரும் 15 ஆயிரம் ரூபாயையும் கப்புராள் இஷ்டப்படி செலவு செய்து வருவதாய் அறிகிறோம்.

நாம் மேலே தெரிவித்த முத்துலிங்க ஸ்வாமிகள் அவர்களால் அறுகோணத் தகட்டில் சடக்கர மந்திரத்தை ஸ்தாபித்து அதை ஓர் தங்கப் பெட்டியில் வைத்துக் கோவில் திரைக்குப் பின்னல் அடக்கம் செய்துவிட்டுப் போனர். அத்தங்கப் பெட்டியைப் பிரதி வருடமும ஆடி மாதப் பருவத்தில் ஆனைமேலேற்றி முக்கோண வடிவமாய் இருக்கும் கதிர்காம மாடவீதியைச் சுற்றி வருவதே அங்கு நிகழும் பெரிய உற்சவமாகும். அதைக் காணுவான் வேண்டியே அம்மையாரும் சென்றனர்.

கதிர்காமத்தப்பன் எல்லா மதஸ்தினருக்கும் தங்கள் தங்களுக்குள்ள குறைகளைத் தீர்ப்பதால் அதற்குப் பிரார்த்தனைகள் செலுத்தவே லக்ஷக்கணக்கான இந்துக்களும், அவர்களுடன் பல முஸ்லீம்களும், அநேக கிறிஸ்துவர்களும், புத்தர்களும், அந்த உற்சவத்திற்குச் செல்வதை அம்மையாரவர்கள் நேரில் கண்டனர். அவர்களெல்லாம் நீராடிக் கோயிலின் பின்புறம் வந்து ஜபம் இருந்து, நமது கந்தப் பரமனைத் தியானம் செய்கிறார்களாம். இதனைத் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்

"சாதிமதப் பிணக்கின்றிச் சமரசமா
யெல்லோருஞ் சார்ந்து நின்றே

ஆதியந்தம் இல்லாத அறுமுகனே
யென்றுன்னை அரற்றுகின்றார்

சோதி! நினதருளவர்க்குத் துணைபுரிதல்
இயல்பன்றோ சொல்ல வொண்ணுக்

காதலன்பு கரைகடந்த கதிரைவேற்
பெருமானே! கருணைத் தேவே.

என்று அழகாகப் பாடுகின்றார்.

இந்துக்கள் மாணிக்க கங்கையில் நீராடி, நீரணிந்து, விபூதிமலைக்குச் சென்று ஓர் அகண்டத்தில் விபூதியை நிரப்பிக்கொண்டு அதற்குமேல் கற்பூரக்கட்டிகளை வைத்துக் கொளுத்திக்கொண்டு "அரோகரா" என்ற சத்தத்துடன் ஆண்டவன் சந்நிதிக்குச் செல்லும் காட்சியை அம்மையார் தரிசித்தனர் அத்துடன் அத்தினத்தில் ஓர் யானை காட்டி விருந்து வந்து ஆலயத்துக்குமுன் மண்டி இட்டுப் படுத் துக்கொள்ள நான் மேலே கூறிய தங்கப் பெட்டியை அதன் மத்தகத்தின்பேரில் ஏற்றியதும் ஓர் பூசாரியும் ஏறிக்கொண்டு முக்கோண வடிவமான மாடவீதியைச் சுற்றி ஆலயத்திற்குமுன் வந்து சேருவதற்குள் அந்த யானை பாரம் தாங்கமாட்டாது நுரையும் தள்ளி, அது கஷ்டப் படுவதை அம்மையார் கண்டு ஆண்டவன் திருவருட் செயல் இப்படியும் இருக்கிறதென்று எண்ணித் துதித் தனர். யானைக்கு அத்தகைய கஷ்டம் ஏற்படாவிடில் அருகில் அக்கினி அகண்டத்துடன் செல்லும் ஆயிரக் கணக்கான அன்பர்களைக் கஷ்டப்படுத்துமாகையால், கதிர்காமத்தப்பன் யானையை அந்நிலையில் வைக்கின்றா னென அறிகிறோம். அந்த யாத்திரையில் எவ்வித இடைஞ்சலுமின்றிப் பக்தகோஷ்டிகளின் பக்தியைக் கண்டு பரவசப்பட்டும் யானையின் நிலையைக் கண்டு அதி சயித்தும் பிறமதஸ்தர்கள் குமரனை வணங்கும் அற்புதத்

தைக் கண்டு ஆச்சரியப்பட்டும் அம்மையார் சுகமாய் வீடு வந்து சேர்ந்தனர். இவ்வற்புதத்தைக் குறித்து முருகனிடம் மாறாத பக்திபூண்டொழுகுபவரும், திருத்தணிகேசன் உயிர்வருக்கப் பாமாலைபாடிய அன்பருமாகிய குகஸ்ரீ அருணாசல நாயகரவர்கள் பாடிய பாடலையும் பகர்வோம.

மின்னனைய சுடர்வடிவேல் விளங்குதிருக்
கதிர்காம மிளிருஞ் சேயோன்
பொன்னனைய திருவுருவிற் கலந்தகினை
துளப்பான்மை புறத்தே காட்ட
கன்னிகுறக் காதலனாய்க் காட்டுவழி
வந்துனக்கே கருணை செய்தான்
என்னமொழிர் தருகுவேன் பத்மம்மா
நின்சிறப்பு என்றும் வாழி.

வயலூர் முருகன் அம்மையாருக்கு வண்டி அனுப்பிய அற்புதத்தை இனிக் கவனிப்போம்.

## வயலூர் முருகன் வண்டி அனுப்பிய அற்புதம்.

இங்கில உலகத்தே மிகவும் கொண்டாடப்பெறுஞ் சுப்பிரமணிய சுவாமி இன்புடன் எழுந்தருளியிருக்குந் தலங்களுள் வயலூர் என்பது ஒன்று. இவ்வருமைத்தலம் திருச்சிராப்பள்ளிக்கு ஆறு மைல் மேற்கில் காவேரியாற்றின் தென்பால் அமைந்துள்ளது. இத்தலத்திலே தான் அருணகிரி நாதருக்குச் சுப்பிரமணியர் இரண்டாமுறை உபதேசித்தருளியதைப் பழனித் திருப்புகழில்,

பாத பங்கய முற்றிட வுட்கொண்
டோது கின்றதி ருப்புகழ் நித்தம்
பாடு மன்பது **செய்ப்பதி** யிற்றந்—தவனீயே

என்று அருணகிரியார் திருவாக்கால் பாடியுள்ளார். செய்ப்பதி என்பது வயலூர். வயலூரில் அவருக்குள்ள பக்தி விசேஷத்தை அநேக திருப்புகழ்களில் காட்டியுள்ளார். வயலூரா! வயலூரா!! என்று குறித்துப் பாடும் பாடல்களை விரிக்கிற் பெருகும்.

இத்தலத்திற்கு "வயலூர்ப் புராணம்" திருச்சிபி லிருந்த வித்துவான் அமிர்தம் சுந்தரநாதப் பிள்ளை என்னும் புலவசிகாமணியால் பாடப்பெற்றுள்ளது. அவரால் பாடி இற்றைக்கு 28 வருடங்களுக்குமுன் அச்சிட்டு வெளி வந்த "ஆதி வயலூர் வெண்பா அந்தாதி" என்னும் நூலில் இத்தலம் சிவத்தலமெனவும் ஆங்குப் பூசித்துப் பேறு பெற்ருேர் இந்திரன் முதலிய தேவர்களும், இந்திராணி முதலிய தெய்வ மாதர்களும், அக்கினியாதி முச்சுடர்களும், அம்முச்சுடர் வழி வந்த சேர, சோழ, பாண்டியரென்பன யாவும் வயலூர்ப் புராணத்தால் அறியலாமென அந்தாதி நூல் கூறுகிறது.

திருத்தணிகையில் அப்பனுக்கு உபதேசித்த குறை நீங்கக் காஞ்சி குமரகோட்டத்தில் தவக்கோலம் பூண்டு அப்பனையும், அம்மையையும் குறித்துத் தவம்புரிகிருரெனக் காஞ்சிப் புராணம் கூறுவதைக் குமரகோட்ட வரலாற்றில் அறியவும். அதுபோலவே திருவேரகத்தில் சுவாமிக்கு உபதேசித்த மாசுதீர வயலூரில் அப்பனைப் பூசித்தாரென்பதைப் பின் வரும் ஆதாரத்தாலறிந்து பரவசம் கொள்வோம். வயலூர் வெண்பா அந்தாதிக்குச் சாத்துக்கவி தந்த பிரம்மஸ்ரீ சாது சதாசிவப் பிரமம் என்னும் பெரியார் திருவாய்மலர்ந் தருளியதையும் கேளுங்கள்.

ஏறுயர்த்த கொடிப்பரமன் சிறைப்பரமன்
றுயரகற்ற வினிதாவந்து
வீறுயர்த்த மறைமுதலி னெண்பொருளை
விளம்புகென மிக்ககாதல்
தேறுயர்த்த வறுமுகனை யைம்முகனுர்
கேட்டிடலுந் தெளியவந்நா
ளாறுயர்த்த தேசிகனுந் திருவேரகத்தி
லுரை யளித்தா னன்றே.

அப்பனுக்கே குருவான தப்பகற்றக்
குகன்முறையே யடைந்துதானவ்

வப்பனுக்கே பூசைபுரிந் தப்பனுய
ராசியுற்ற வாதி யூராம்

வெப்ப னுக்காச் சோலைசெறி வயலூரில்
வாழ்குகனும் வேலோனுள்ள

மொப்பனுக்காத் தமிழ்வெண்பா வந்தாதி
பிறந்திட்ட துலகி னம்மா

இந்ததமிழ் வெண்பாவந் தாதிதனைப்
பிறப்பித்தோ னெவனே யென்னில்

கந்தனவன் தந்தைதா யிவர்தாளி
லன்பருக் கருத்து மிக்கான்

முந்தவணி தமிழ்முறையே கற்றறிந்து
கவிசொல்லு முதன்மையாள

னந்தமிழ னமிர்தகவி புத்திரன்சுந்
தரநாத னறிஞ ரேறே.

இத்தகைய அருமைத் தலத்தைத் தரிசிக்க வேண்டு மென்பது ஸ்ரீமதி வி. ஜீ. பத்மாவதி அம்மையாரின் உள்ளக் கிடக்கை. அம்மையார் ஆண்டுதோறும் திருச்செந்தூர் சென்று ஆண்டவனைத் தரிசித்துவிட்டு வருவது வழக்கம். விசு வருஷம் மாசி மாதம் திருச்செந்தூர் சென்று திரும்புகையில் தனது குமாரர்கள் மூவருடன் திருச்சிக்குச் சென்று அங்கிருந்து வயலூர் போய் வர வாடகை மோட்டார் ஏற்பாடு செய்துகொண்டு திருக்கற்குடியை அணுகியதும் அங்குள்ள பாலம் உடைந்து போய்த் தான் கொண்டுபோன வண்டி அதற்குமேல் செல்ல இயலாது யாவரும் இறங்கி நடக்க வேண்டியதாயிற்று.

நமது அம்மையாரோ நடந்தறியாதவர்கள். தனது சரீரத்தைத் தூக்கிக்கொண்டு நடப்பதும் கஷ்டம். அங்கு வேறு வண்டியும் கிடைக்கவில்லை. வெய்யிலின் வேகமோ

அதிகம். காலைப் பூமியில் வைக்க முடியாமல் கந்தரனுபூதியைப் பாடிக்கொண்டு கொஞ்சதூரம் சென்றார். இவர்கள் பாதம் வெய்யிலில் படும் அவஸ்தையைக் கண்ட மைந்தர்கள் அருகில் வாழைச் சோலையில் கழித்துப் போட்டிருந்த வாழைமட்டையைக் காலில் கட்டி நடக்கச் செய்தார்கள். "இதுவும் முருகா உன் திருவிளையாடலா" வென்று அவனை நொந்துகொண்டு அநுபூதியை மட்டும் விடாமல் பாடிக்கொண்டு சிலதூரம் சென்றதும் எதிரில் ஒரு மாட்டுவண்டி வரக்கண்டார்.

அந்த வண்டி ஒருவர் உட்காருவதற்குத் தான் இடமாக இருந்தது. வண்டிக்காரன் இஷ்டத்தின்பேரில் அம்மையார் மட்டும் வண்டியில் ஏறிக்கொண்டார். தனது மைந்தர்கள் கஷ்டப்பட்டு நடந்துவர வண்டி ஓட்டுபவனும் கீழிறங்கி ஓட்டிக்கொண்டுவர வயலூர் போய்ச் சேர்ந்தார்கள். அம்மையாரும் அவரது மைந்தர்களும் வயலூர் முருகனைக் கண்ணாரக் கண்டு மனமார வாழ்த்தித் துதித்துவிட்டு மீண்டும் வந்த வண்டியில் ஏறிக்கொண்டு மோட்டார் நிறுத்திவிட்டுப்போன இடத்தை வந்து சேர்ந்தனர்.

அச் சிறுவண்டி உடைந்த பாலத்தையும் தாண்டி வந்த அதிசயத்தைக்கண்ட அம்மையார் அவ்வண்டிக்காரனுக்கு வேண்டிய பொருள் கொடுக்க, எவ்வளவோ முயன்றும் தனக்கு ஒன்றும் வேண்டாமெனச் சொல்லி வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவர் போய்விட்டாரென்றால் அவ்வண்டி யாருடையது? வண்டி ஓட்டிவந்தவர் யார்? வண்டி ஓட்டிப் பிழைப்பவராயிருந்தால் ஒருவர் மட்டும் ஏறக்கூடிய வண்டியைத்தான் வைத்திருப்பாரா? காசு கொடுத்தால் வேண்டாம் என்பாரா? என்பதையெல்லாம் இதை வாசிக்கும அன்பர்களே முடிவு செய்துகொள்ள வேண்டும். கலியுக வரதன் அன்பர்கள் பொருட்டு நிகழ்த்தும் திருவிளையாடல்களுள் இதுவும் ஒன்று. இனி அம்மையாரைப் பால் காவடி எடுக்கச் செய்த ஷண்முகஞானபுரம் கந்தப்பெருமான் அருள்விளையாடலைப் பார்ப்போம்.

## ஷண்முக ஞானபுரம் கந்தப் பெருமானுக்கு

## பால்காவடி எடுத்த பிரபாவம்.

## நவரத்ன சேவற்கொடி சமர்ப்பித்த அற்புதம்.

விண்முக மேவி வாழும் விபுதர்கள் சிறையை மீட்ட
தண்முகத் தனிவே லோனைத் தனிப்பெருந் தலைவன்றன்னை
உண்முக மாகி நின்றே உதவிசெய் குகனைச் சென்னை
ஷண்முகக் கோட்ட மேவும் சாமியைப் பரவி வாழ்வாம்.

—கிருபானந்தவாரி.

பூமலி புடைசூழ் புண்ணிய தலங்கள் பலவற்றுள் ஒன்றாகியதும், சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர், யாழ்ப்பாணம் சதாவதானம் ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளை, பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாஸ சுவாமிகள், குகஸ்ரீ கிருபானந்தவாரி ஆகிய முருகனடியார் பலரால் புகழ்ந்து போற்றப்பட்டதுமாகிய ஷண்முகஞானபுரம் என வழங்கும் குயப்பேட்டையில் திருக்கோயில் கொண்டுள்ள கந்தப்பெருமானை நித்தமும் நீரணி மலர்கொண்டு அர்ச்சனை புரிந்து வருபவர் ஸ்ரீமதி வி. ஜி. பத்மாவதி அம்மையார் அவர்கள்.

ஷை அம்மையார் கந்தப்பெருமானுக்கென இரத்தின வேல் செய்து விஷு வருஷம் ஆனி மாதம் 21-ந் தேதி சமர்ப்பித்தார்கள். அதனுடன் சேவற்கொடியையும் சமர்ப்பிக்க எண்ணித் தங்க விலை அதிகரித்துள்ள இக்காலத்தில் பெரும் பொருட்செலவில் சேவற்கொடியைக் கண்கவரும் காட்சியுடன் வெகு அழகாகச் செய்து முடித்தார். வேல் சமர்ப்பித்த காலையில் புஷ்ப விமானம் கட்டி அதன்மேல் சக்தி வேலை எழுந்தருளச் செய்து புரசைவாக்கத்திலுள்ள பழமுதிர்சோலை போன்ற தனது இல்லத்திலிருந்து வெகு ஆடம்பரமாக ஊர்வலத்துடன் கொண்டு வந்து சமர்ப்பித்தார்.

நவரத்ன சேவற்கொடி முடிந்ததும் அவ்வாறே ஊர் வலமாகக் கொண்டுவர வேண்டுமென்று அம்மையாருக்கு அதிக ஆவல் இருந்தும் சில சந்தர்ப்பத்தால் அவ்வாறு செய்ய இயலாது போக, சஷ்டி உற்சவமும் ஆரம்பித்து விட்டதைக் கருதித் தாரண வருஷம் ஐப்பசி மாதம் 1-ந் தேதி சஷ்டி புண்ணிய தினமாகிய முதல் நாளில் அதனை ஆண்டவனுக்கு ஆலயத்திலேயே சமர்ப்பித்து விட்டார்.

சஷ்டியின் 5-வது நாளாகிய சனிவாரம் அம்மையார் பகல் 2 மணிக்கு வழக்கப்படி அர்ச்சனையை முடித்துக் கொண்டு ஆலய மண்டபத்தில் அமர்ந்ததும் மிக்க மயக் கத்துடன் படுத்து விட்டார். அரை மணி சாவகாசம் பொறுத்து மயக்கம் தீர்ந்து எழுந்ததும் சடைமுடி தரித்த ஒரு பெரியவர் கையில் பால் செம்புடனும் மற்றொரு கையில் சேவற்கொடியையும் ஏந்திக்கொண்டு வந்து தன் னிடத்தில் கொடுத்துவிட்டு மறைந்து விட்டாராம்.

அம்மையார் ஆண்டவன் எண்ணத்தைத் தெரிந்து கொண்டு அதைப் பூர்த்தி செய்யக் கருதி மறுநாள் மகா கந்தர் சஷ்டி புண்ணிய தினமாகிய தாரண ௵ ஐப்பசி௴ 6௳ ஆதிவாரம் பகல் 1 மணிக்கு வைதீகப்படி கட்டிய பால் காவடியுடனும், நவரத்ன சேவற்கொடியுடனும், குடை, கொடி முதலிய விருதுகளுடனும், மங்களகோஷம் ஒருபுறம் முழங்க காவடிப் பாட்டுகளை ஆண்டிகள் பாடிக் கொண்டு வரக் கந்தப்பெருமான் எழுந்தருளியுள்ள வீதி யை அணுகியதும் பரமானந்த பக்திப் பரவசராய் வெகு ஆவேசத்துடன் வருவாராயினர். அக் காட்சியைக்கண்ட ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஆண்டவன் திருவருட் செயலை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினர்.

மாடவீதியை வலம் வரலாமென்றால் கோயிலையணு கியதும் மேற்செல்லவொட்டாது ஆண்டவன் திருமுன் அடியற்ற மரம்போல் வீழ்ந்து "அரோகரா அரோகரா" என்று கோஷிப்பாராயினர். பிறகு கந்தப் பெருமானுக்

குப் பால் அபிஷேகத்தை நிகழ்த்திச் சேவற்கொடியைச் சமர்ப்பித்தார். சேவற்கொடியை ஊர்வலமாகக் கொண்டு வாராத குறைக்குப் பால் காவடியுடன் வரும்படி உத்தரவு செய்து பெற்றுக்கொண்ட ஷண்முகக் கோட்டக் குமர வேளின் அற்புதச் செயலை மக்கள் கண்டு அதிசயித்துப் போற்றித் துதித்தனர். அம்மையாரைப்போல் நாமும் நிற்கும்போதும், நடக்கும்போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும் முருகனையேதியானித்து வாழ்வோமாக.

இவ்வற்புதச் செயலைக் குறித்து "ராவ்பகதூர்" "தணிகை மணி" திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் M.A., இயற்றிய பாடல் பின்வருமாறு:—

புரசைமா நகரத்தில் திருநிறைஷண் முகஞான
புரத்தே வீறு
நிரைசெய்மணிக் கோபுரஞ்சேர் ஷண்முககோட் டத்தமர்ந்த
நிமல ரேயென்
அரசென்றே அகங்குழைந்துள் ளாசையுடன் நாடோறும்
அருச்சித் தேத்திக்
கரைகடந்த பத்தியுடன் பூமாலை புனைந்தேத்திக்
கனிந்து போற்றி.
எண்ணரிய வச்சிரவேல் புனைவித்த தவப்பேறிங்
கேய்ந்த செல்வி
அண்ணலவன் குறிப்புணர்த்த நறும்பாற்கா வடியெடுத்தங்
கயிலோன் கையில்
புண்ணியமா சஷ்டி தினம் திருச்சேவற் கொடிபுனைந்த
புநித நங்கை
தண்ணளிமெய் நிறைபத்மா வதியம்மை பல்லாண்டு
தழைத்து வாழ்க.

இனி அப்பெருமான் அம்மையாருக்குக் காட்டிய ஜோதி தரிசனத்தைப் பகர்வோம்.

ஷண்முகஞானபுரம்

## கந்தப்பெருமான் காட்டிய ஜோதி தரிசனம்.

தாரண வருஷம் மார்கழி மாதத்தில் ஒருநாள் ஸ்ரீமதி வி. ஜி. பத்மாவதி அம்மையாரவர்கள் பகல் 12 மணிக்கு வழக்கப்படி ஷண்முக ஞானபுரம் கந்தசாமி கோவிலுக்கு வந்து அருச்சனை நிகழ்த்தி அமர்ந்திருக்கும் சமயத்தில் குருக்கள் விபூதி மடல் கொண்டுவரப் போனவர் வருவதற்குள் மூலமூர்த்தியின் திருவடியில் விளக்கு எரிவதைப்போன்ற ஜோதி தரிசனம் தெரிந்தது. அம்மையார் உடனே குருக்களை அழைத்துச் சுவாமியின் வேஷ்டி பற்றிக்கொண்டதா என்ன? போய்ப் பாருங்களென்ன, குருக்களும் அச்ஜோதியைக் கண்டு அருகில் சென்றதும் ஜோதி ஆண்டவன் திருவடியில் குளிர்ந்துவிட்டது. ஆங்கு ஒன்றுமே இல்லை.

தற்காலத்தில் ஜோதி ஜோதி எனப் பலரும் பாடுவர். அப்பாடலைப் பாடிய இராமலிங்க ஸ்வாமிகளுக்கு முதல் முதல் கண்ணுடியில் காட்சியானது திருத்தணிகேசனே யாவன். அதனால் தான் அவர் தணிகைக்குச் சென்று ஆர்வத்தோடு கல்லும் கரையும் வண்ணம் கண்ணீர் சோரச்சோரத் தணிகேசனைப் பாடிய பாடல்கள் 480. அவைகளில் பல இடங்களில் ஜோதியே எனவும்; சுடரே எனவும் பாடிய பாக்கள் அளவிறந்தன. அதனை முருகன் திருவருட்பாவில் பரக்கக் காணலாம்.

நமது கந்தப் பெருமானது திருவுருவத்தைக் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில்

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றஜோதிப் பிழம்பதோர் மேனி யாகி

கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டு
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.

என்றல்லவா வருணிக்கின்றார்.

ஏகான்மவாதிகள் தாங்களே பிரம்மம் என்பர். பிரம்மம் எது என்பதைத் தணிகைச் சந்நிதி முறையில் கந்தப்பதேசிகர் பாடுவதையும் கேளுங்கள்.

நாளே பிரம மென்பாரும் நானே பிரம மென்பாருங்
கோளே பிரம மென்பாருங் குணமே பிரம மென்பாருந்
தாளே யூழைப் பிரமமெனச் சாற்றுவோருந் தணிகைவரை
வேளே பிரம மென்னாமல் வீணே பிறப்பி லுழல்வாரே.

என்றல்லவா மயக்கமற நன்றாய்ப் பாடியுள்ளார்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் கந்தப்பெருமானைத் தவிர வேறு ஜோதி இல்லையெனக் கூறி விடலாம்.

## தணிகைச் சந்நிதி முறை

சேந்தாநமோ குமராநமோ சேயேநமோ வனவள்ளி தன்
காந்தாநமோ வணிகாநமோ கந்தாநமோ கடம்பாநமோ
சாந்தாநமோ முருகாநமோ தணிகாசலத்திறைவா நமோ
வேந்தாநமோ என ஓதுவேன் வேலாயுதா வேலாயுதா.

## வாழ்த்து (முருகன் அருள்வேட்டல்.)

அருள்பொழியும் முகம்வாழி அழகுதிருத் தோள்வாழி
உருள்கடம்பத் தார்வாழி ஒலிகோழி மயில்வாழி
இருள்கடியும் வேல்வாழி எழில்வள்ளி பிடிவாழி
சுருள்படிந்த தணிகைமுதல் தொல்பதிகள் வாழியரோ.

# மதிப்புரை

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்.,
சென்னைப் பல்கலைக் கழகம்

கந்தப் பெருமானைக் கலியுக வரதன் என்றும், கண் கண்ட தெய்வம் என்றும் அறிந்தோர் போற்றுவர். காட்டு வழிச் சென்றாலும், கரடி பயம் நேர்ந்தாலும் கந்தனார் மெய்யடியாரைக் காத்தருள்வார் என்னும் உண்மை இந் நூலிற் கண்ட நிகழ்ச்சிகளால் நன்கு விளங்கும். தென் னாட்டுப் படைவீடுகளில் அமர்ந்தருளும் முருகனை மன மாரப் போற்றுதலே பிறவிப் பயன் எனக் கருதும் பத்மா வதியம்மையார் கண்ட காட்சிகளை அன்பர் சுப்பிரமணிய நாயகர் அவர்கள் விளக்கியுள்ளார்கள். இத்தகைய நூல் கள் கலிகாலத்தில் நிலைகுலைந்து வாழ்வார்க்குப் பெரும் பயன் விளைக்கும். கந்தனை நம்பினோர் கைவிடப்படார்.

ரா. பி. சேதுப் பிள்ளை.

Sri Bharathi Press Choolai, Madras. P I.C. Ms. 18 (22-10-45) C. 1000

# காட்டுவழி வந்த
# கதிர்காமத்தப்பன் திருவிளையாடல்

முருகனடியாராகிய ஓர் அம்மையாருக்காக நள்ளிரவில் காட்டில் துணையாக வந்தும், கொட்டகையிட்டுதவியும், வள்ளி அம்மையார் உணவளித்தும், கரடியை ஓட்டியும், கதிர்காமத்தப்பன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும், வயலூர் முருகன் வண்டி அனுப்பிய அற்புதமும், ஷண்முகஞானபுரம் கந்தப் பெருமானுக்குப் பால் காவடி எடுத்த பிரபாவமும், அவர் காட்டிய ஜோதி தரிசனமும் அவைகள் நிகழ்ந்த வருட மாதக் குறிப்புடன் இச்சிறு நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

கதிர்காம மான்மியத்தைக் கந்தபுராணம், சங்க நூல், திருப்புகழ், சரித்திர ஆதாரங்களுடன் வரையப்பட்டுளது.

**இதன் விலை அணா 4.**

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்:—

ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.

**ஆ. சுப்பிரமணிய நாயகர்,**
35, வெங்கடேச நாயகன் தெரு,
தயப்பேட்டை
**பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.**